**GSMII/25**

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II)க்கான முதன்மைத் தேர்வு

Examination : Combined Civil Services Examination-II [Group-II Services] Main Examination

பாடம் : பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – II] (விரிந்துரைக்கும் வகை)

Subject : General Studies (Degree Standard) [Paper – II] (Descriptive Type)

தேர்வு நாள் : 23.02.2025 மு.ப.

Date of Examination : 23.02.2025 F.N.

Do not use this area

Booklet Serial No.

Don't write anything in this space


தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II)க்கான முதன்மைத் தேர்வு

Examination : Combined Civil Services Examination-II [Group-II Services] Main Examination

பாடம் : பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – II] (விரிந்துரைக்கும் வகை)

Subject : General Studies (Degree Standard) [Paper – II] (Descriptive Type)

தேர்வு நாள் : 23.02.2025 மு.ப.

Date of Examination : 23.02.2025 F.N.


Register No.

Signature of the candidate with date.

**Certificate**

I have issued this Question-cum-Answer booklet to this candidate after verifying his / her Register Number, photo and signature in the hall ticket.

Signature of the Room Invigilator with date.

**Certificate**

(To be signed after the completion of the examination.)

I have struck out all the unanswered blank spaces in the Question-cum-Answer Booklet by using black ink pen (Fountain Pen or Ball point pen or Gel pen) which I have used for writing this examination.

Signature of the candidate with date.

Do not use this area

# பொது அறிவு / GENERAL STUDIES

## தாள் – II / PAPER – II

## விரிந்துரைக்கும் வகை / Descriptive Type

## பட்டப்படிப்புத் தரம் / Degree Standard

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 300

Duration : 3 Hours | Total Marks : 300

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 80 பக்கங்களைக் கொண்டுள்ளது)

(This question-cum answer booklet consists of 80 pages)

**அறிவுரைகள் / Instructions**

**(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)**

**(Candidates shall comply with the following instructions)**

1. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 80 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்கும் நேரத்திற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

   Candidates shall first ensure that this question-cum-answer booklet contains 80 pages. If any defect is noticed in the question-cum-answer booklet, it shall be reported to the room invigilator before the commencement of the examination and candidate must get it replaced with another complete question-cum-answer booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.

2. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   Candidates have to answer each question in the question-cum-answer booklet, only in the space provided for that question. They should not write anything outside the space provided.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவுக்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

   Candidates should strike out the unused blank spaces of the answered questions and blank spaces of unanswered question with the permitted black colour ink pen without fail.

3. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

   Candidates should answer the number of questions as instructed in the question cum answer booklet in each section. If more than the required number of questions are answered, the excess questions answered at the end of each section will not be taken into account.

4. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் வினா-விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

   Candidates should not write their Register Number anywhere in this question-cum-answer booklet. The question cum answer booklet of those candidates who violate this instruction, shall be invalidated.

5. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் வினா-விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

   Candidates should sign at all designated places. The question-cum-answer booklets, not signed by the candidates shall be invalidated.

6. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

   Candidates should not tear off any leaves from this question-cum-answer booklet.

7. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

   No separate marks will be awarded for neatness of writing and correctness of spelling in respect of this examination.

8. இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ளவையே இறுதியானவை.

   In this question-cum-answer booklet, questions are in Tamil and English versions. In all matters, English version is final.

## பகுதி — அ

## PART — A

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

***Note :*** Answer **all** the questions.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 100 words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்**.

Each question carries **ten marks**.

**(9 × 10 = 90)**

| | |
|---|---|
| Q.No. 1 | சுதந்திரப் போராட்டத்தின் போது ஆங்கிலேயர்களுக்கு எதிரான பாளையக்காரர்களின் கிளர்ச்சியின் காரணங்களையும் விளைவுகளையும் மதிப்பிடுக.<br><br>Estimate the causes and results of the Palayakarars Revolt against the British during the freedom struggle. |
| Q.No. 2 | மகப்பேற்றிற்குப் பிறகு வழங்கப்பெறும் பணப்பலன் குறித்த கருத்துசார் காரணங்களை உறுதிப்படுத்துக.<br><br>Justify the rationale behind disbursing the cash benefits after the delivery. |
| Q.No. 3 | இந்தியாவின் நவீன நகரமயமாதலின் போக்குகள் பற்றி எழுதுக.<br><br>Write about the modern trends of urbanisation in India. |
| Q.No. 4 | (அ) குவாண்டம் புள்ளிகளைக் கண்டுபிடித்ததற்காக, 2023 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளின் பெயர்களை எழுதுக.<br><br>(ஆ) குவாண்டம் புள்ளிகளின் ஏதேனும் ஐந்து பயன்பாடுகளைக் குறிப்பிடுக.<br><br>(a) Name the scientists who won the Nobel prize for the discovery of quantum dots in the year 2023. (5)<br><br>(b) Mention any five applications of quantum dots. (5) |
| Q.No. 5 | மாநில உயர் நீதிமன்றங்களின் செயல்பாடுகளில் உள்ள உள்ளார்ந்த குறைபாடுகளில் நம் மீளாய்வுக்கு தகுதியானவற்றை ஆராய்க.<br><br>Examine the inherent flaws in the operations of the State High Courts that merits our scrutiny. |
| Q.No. 6 | மொழிவாரியான மாநிலங்கள் அமைவதால் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்குக.<br><br>State the merits and demerits of the organisation of states on the “Linguistic line”. |

| | |
|---|---|
| Q.No. 7 | மாறிவரும் அரசியல் சூழலில் மாநிலக் கட்சிகளின் செயல்பாடுகள் ஏன் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன?<br>Why the role of regional parties become more prominent in the changing political conditions? |
| Q.No. 8 | உயிரினங்களின் அழிவின் காரணமாகச் சுற்றுச்சூழல் சமநிலை எவ்வாறு மாறுகிறது? விளக்கவும்.<br>How does the ecological balance changes due to the extinction of species? Explain. |
| Q.No. 9 | அன்னிய செலுத்து நிலையின் (BOP) யின் கூறுகளைக் கூறி விளக்கவும்.<br>State and explain the components of balance of payments. |

## பகுதி — ஆ

## PART — B

தேர்வர்கள் இந்த பகுதியில் உள்ள வினாக்களுக்கு தமிழிலோ **அல்லது** ஆங்கிலத்திலோ விடையளிக்கலாம்.

Candidates may answer the questions in this part either in Tamil **OR** in English.

***குறிப்பு :*** i) கொடுக்கப்பட்டுள்ள **ஐந்து** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***Note :*** Answer any **three** questions out of **five** questions.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 100 words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்**.

Each question carries **ten marks**.

**(3 × 10 = 30)**

| | |
|---|---|
| Q.No. 10 | ஆதிச்ச நல்லூர்-இடுகாடுகள் பற்றி விவரிக்க.<br>Describe in detail Burialsite of Adichanallur. |
| Q.No. 11 | நடுநிலைப் பற்றி திருவள்ளுவரின் கருத்தை விவரித்து எழுதுக.<br>Explain Thiruvalluvar’s views on the concept of Impartiality. |
| Q.No. 12 | முல்லைக்கலிப் பாடல்களில் ஏறு தழுவுதல் செய்திகளைச் சுட்டி விளக்குக.<br>Point out the informations related to bullfighting (Jallikattu) in the songs of Mullai Kali. |

| | |
|---|---|
| Q.No. 13 | இந்தியாவில் மக்கள் இசை குறித்து விவரிக்க.<br><br>Describe Folk Music in India. |
| Q.No. 14 | திராவிட இயக்கத்தின் வரலாறு குறித்து விவரி.<br><br>Discuss the history of Dravidian Movement. |

## பகுதி — இ

## PART — C

*குறிப்பு :* i) இப்பகுதி ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று வினாக்கள் உள்ளன.

***Note :*** This part contains six sections and each section contains three questions.

ii) **ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மூன்று வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**In each section, answer any two questions out of three questions.**

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding 200 words.

iv) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து மதிப்பெண்கள்.**

Each question carries **fifteen marks**.

**(12 × 15 = 180)**

### பிரிவு — அ

### SECTION — A

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 15 | இந்தியாவில் போர்ச்சுகீஸிய ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதில் வாணிகம் எவ்வாறு பங்கு வகித்தது என்பதை குறித்து விவாதி.<br><br>Discuss how the trade played an important role in the expansion of Portuguese power in India. |
| Q.No. 16 | இந்திய விடுதலைப் போரில் பத்திரிகைத் துறையின் பங்களிப்பை மதிப்பீடு செய்க.<br><br>Evaluate the role of press in the Indian freedom movement. |
| Q.No. 17 | காலனித்துவ ஆட்சியின் போது இந்திய விவசாயம் வணிகமயமாக்கப்பட்டதால் ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளை விவாதிக்கவும்.<br><br>Discuss the impact of commercialization of Agriculture in India during colonial rule. |

## பிரிவு — ஆ

## SECTION — B

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 18 | பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான மத்திய மற்றும் மாநில அரசின் நலத்திட்டங்களைப் பகுப்பாய்வு செய்க.<br><br>Analyze the Central and State Government Welfare Programmes available for the SCs and STs in India. |
| Q.No. 19 | 2013 ல் உருவான, பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் (POSH) குறிப்பிடத்தக்க அம்சங்களையும் அதன் உருவாக்கம் குறித்தும் விளக்குக. POSH சட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள தடைகள் குறித்து விவாதிக்க.<br><br>Elucidate the significant features and explain the formation of protection of women from Sexual Harassment Act (POSH), 2013. Discuss the hurdles in the implementation of the POSH Act. |
| Q.No. 20 | இந்தியாவின் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு பொது நிலையில் விளக்கி, பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களைச் சீர்படுத்தும் வழிமுறைகளை விவரிக்கவும்.<br><br>Write an overview of Panchayat Raj system in India and suggest measures to improve the Panchayat Raj institutions. |

## பிரிவு — இ

## SECTION — C

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 21 | நாணயத்திற்கு அப்பாற்பட்ட பிளாக்செயின் பயன்பாடுகள் பற்றி விளக்கவும்.<br><br>Explain about the block chain applications beyond currency. |
| Q.No. 22 | செயற்கை விதைகள் என்றால் என்ன? இவை உருவாக்குவதில் உள்ள படிநிலைகள் மற்றும் பயன்கள் குறித்து குறிப்பிடுக.<br><br>What are Artificial Seeds? Outline the steps involved in developing Artificial Seeds. Add a note on its importance in Forestry. |
| Q.No. 23 | வெக்டர் அணு மாதிரியை விளக்குக. அதனோடு தொடர்புடைய குவாண்டம் எண்களையும் விளக்குக.<br><br>Explain the Vector Atom model and Quantum numbers associated with it. |

## பிரிவு — ஈ

## SECTION — D

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 24 | தமிழ்நாட்டில் மாவட்ட மனநலத் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முதன்மை செயல்பாடுகளையும், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமூகத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பின்பற்றும் விதத்தினையும் ஆராய்க.<br><br>Examine the objectives and primary activities of the district mental health programme in Tamil Nadu, and discuss the way it envisions adopting a community – centered approach to solving health problems. |
| Q.No. 25 | "சிறு அரசியலமைப்பு" என அழைக்கப்படும் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை பகுப்பாய்க.<br><br>Analyze the Constitutional Amendment Act which is termed as the "Mini-Constitution". |
| Q.No. 26 | பொது சேவை வழங்கல் மூலம் "குடிமக்களுக்கு அதிகாரமளித்தல்" என்பது சாசன சட்டத்தின் நோக்கமாகும் – விவாதிக்க.<br><br>"To empower the citizen through Public Service Delivery" is the basic objective of the Citizen's Charter – Discuss. |

## பிரிவு — உ

## SECTION — E

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 27 | தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆபத்திற்கான (எ.கா. வெள்ளம், சூறாவளி) தற்போதுள்ள முன்னெச்சரிக்கை அமைப்புகளின் செயல்திறனை நுணுக்கமாக மதிப்பிடுக.<br><br>Critically evaluate the effectiveness of existing early warning systems for a specific hazard (e.g. floods, cyclone) in Tamil Nadu. |
| Q.No. 28 | இந்தியாவில் நீர் மின் உற்பத்தியைப் பாதிக்கும் காரணிகளை ஆராய்ந்து, வடக்கு மற்றும் தீபகற்ப ஆறுகளின் பங்கை விளக்குக.<br><br>Examine the factors affecting hydroelectric powers generation in India and explain the role of northern and peninsular rivers. |
| Q.No. 29 | கிராமப்புறச் சமூகங்களுக்கான இந்தியாவின் தினை மிஷனின் பொருளாதார மற்றும் சுகாதார தாக்கங்களை ஆராய்க.<br><br>Explore the economic and health impacts of India's millet mission for rural communities. |

## பிரிவு — ஊ

## SECTION — F

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 30 | இந்தியாவில் விவசாய சந்தைபடுத்தல் முறையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் மற்றும் அரசாங்க நடவடிக்கைகளை எடுத்துரைக்க.<br><br>Point out the suggestions and steps taken by the government to improve the agricultural marketing system in India. |
| Q.No. 31 | இந்திய நிதிக்குழுவின் செயல்பாடுகளையும் பரிந்துரைகளையும் விளக்குக.<br><br>Elucidate the functions and recommendations of finance commission of India. |
| Q.No. 32 | ஸ்டார்லிங்க் சேவைத் திட்டத்தின் இயல்புகள் மற்றும் சவால்களைப் பகுத்தாய்க.<br><br>Analyse the features and challenges of Starlink Service Scheme. |